# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 04.02.2011 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் அதிகாரம் ஆலி இம்ரானின் 111வது வசனத்தை ஓதினார்கள்:**

**எல்லா மனிதர்களின் பயனுக்காகத் தோற்றுவிக்கப் பெற்ற நீங்கள் சிறந்த கூட்டத்தினராவீர்கள். நீங்கள் நன்மையை ஏவுகின்றீர்கள். தீமையிலிருந்து தடுக்கின்றீர்கள். மேலும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கின்றீர்கள். வேதத்தையுடையவர்களும் நம்பிக்கை கொண்டிருந்தால் அது அவர்களுக்குச் சிறந்ததாக இருந்திருக்கும். அவர்களுள் நம்பிக்கை கொண்டவரும் சிலர் உள்ளனர். அவர்களுள் பெரும்பாலார் கட்டுப்படா மக்களாவர். (3:111)**

நீங்கள் கேட்ட இந்த வசனம் தொடர்பாக இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் நான் விளக்கிக் கூறியுள்ளேன். ஆனால் இது எப்படிப்பட்ட விஷயமாக, போதனையாக, நினைவூட்டலாக இருக்கின்றதென்றால் அதைப் பற்றி மீண்டும் மீண்டும் கூறவேண்டியதிருக்கிறது. பல்வேறு கோணங்களில் இதைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அவர்கள், தாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளதாக வாதம் செய்து விட்டு இருந்து விடாமல் தங்களது ஈமானை பாதுகாத்தவாறு அதற்கு வலுவூட்டியவாறு தங்களது சந்ததிகளின் ஈமானைப் பாதுகாப்பதற்கும் அவர்கள் முயற்சி செய்வார்கள். அவர்கள் தங்களது ஈமானையும் தங்களது மனைவி மக்களின் ஈமானையும் பாதுகாத்தவாறு அவற்றிற்கு வலுவூட்டுவதற்கு மட்டும் அவர்கள் முயற்சி செய்வதில்லை. மாறாக, தங்களது சுற்றுச் சூழலில் வசிக்கின்ற ஒவ்வொரு மதத்தையும் ஏற்றுக் கொண்டுள்ளவர்களுக்கும் இன்னும் சொல்லப்போனால் மார்க்கமில்லாதவர்களுக்கும் கூட அல்லாஹ்வுக்காக அவர்கள் நன்மைகளைச் செய்பவர்களாக இருக்க வேண்டும். அதன் மூலம் அவர்கள் ஈமான் கொள்பவர்களாக ஆக வேண்டும் என்பதற்காக அவர்கள் போதனை செய்கின்றனர்.

இந்த வசனத்தில் அல்லாஹ் ஒரு மிகப்பெரும் பொறுப்பை நம்பிக்கையாளர்கள் மீது சுமத்தியுள்ளான். அவர்கள் நாங்கள் இந்த காலத்தின் இமாமாக இருக்கின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடியாராகவும், உண்மைப் பேரன்பராகவும் இருப்பவரை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்று கூறியவாறு அல்லாஹ்வின் மீதுள்ள தங்களது ஈமானை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள். தங்களது வலுவான ஈமானை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள். ஆரம்ப நூற்றாண்டுகளில் இருந்த முஸ்லிம்கள் போன்று, எவ்வாறு அவர்கள் திருக்குர்ஆனின் கூற்றுகளையும் கட்டளைகளையும் எப்போதும் தங்கள் கண்முன் நிறுத்தி செயல்பட்டார்களோ ஷரீஅத் மற்றும் திருக்குர்ஆனின் கட்டளைகளை தங்களது வாழ்வில் நடைமுறைப்படுத்தி அதன் மூலம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக் கொள்பவர்களாக ஆவதற்கு முயற்சி செய்தார்களோ, எவ்வாறு அதில் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் வெற்றி பெற்றார்களோ அவ்வாறே இந்த காலத்தில் திருக்குர்ஆனின் கட்டளைகள் மீதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைகள் மீதும் முழுமையான வலுவான ஈமான் கொண்டுள்ளதாக வாதம் செய்கின்ற அஹ்மதிகளாகிய நாம் நமது வாழ்க்கையில் புரட்சியை உருவாக்குவதற்கும் நமது வாழ்வில் திருக்குர்ஆனின் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், காலத்தின் இமாமாகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கையில் பைஅத் செய்துள்ளோம். நாம் எந்த அளவு சிறந்த உம்மத்தாக இருக்கின்ற உரிமையை நிறைவேற்றி வருகின்றோம் என்பதை நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நாம் எந்த அளவு மனிதர்களின் நன்மைக்காக அவர்களுக்காக நமது உள்ளம் வேதனையடைகின்ற அந்த உரிமையை நிறைவேற்றி வருகின்றோம் என்பதை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நாம் எந்த அளவு நமது சொற்களுடன் நமது செயலால் நல்ல விஷயங்களைப் போதிக்கின்றோம். நாம் எந்த அளவு நமது செயல் மற்றும் போதனைகள் மூலம் உலகத்தை தீமையிலிருந்து பாதுகாப்பதற்கு முயற்சி செய்கின்றோம் என்பதை நாம் ஆய்வு செய்து

பார்க்க வேண்டும். நாமே ஏதாவதொரு விதத்தில் சுயமாக உருவாக்கிக் கொண்டே அளவுகோலின் அடிப்படையில் இந்த ஆய்வுகளை நாம் மேற்கொள்ள முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிர்ணயித்துள்ள அந்த அளவுகோலை நம் முன்னால் வைத்தவாறு நாம் இந்த ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.

இந்த அளவுகோல் தொடர்பாக நான் பிறகு கூறுவேன். எதுவரை இந்த ஆய்வை மேற்கொண்டவாறு நம்மிடம் தூய மாறுதல்களை உருவாக்க நாம் முயற்சி செய்து கொண்டிருப்போமோ அதுவரை நாம் முன்னேற்றத்தின் வழிகளில் முன்னேறிச் சென்று கொண்டிருப்போம். இன்ஷா அல்லாஹ். தாங்களே சுயமாக உருவாக்கிய அளவுகோலை முன் நிறுத்தி செயல்படும் அந்த சமயத்தில்தான் எப்போதும் சமுதாயங்களின் வீழ்ச்சி ஆரம்பமாகின்றது. அப்போது அவர்கள் மன இச்சைகளின் கைதிகளாக ஆகி விடுகின்றனர். அப்போது அவர்கள் அடிப்படை நோக்கத்தை மறந்து விடுகின்றனர். இதனை திருக்குர்ஆன் நமக்கு கவனமூட்டியவாறு கடந்த கால நபிமார்களைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளது. சென்ற காலத்திலிருந்த சமுதாயங்கள் தங்களது போதனைகளை மறந்து தங்களது நோக்கத்திலிருந்து முகம் திருப்ப ஆரம்பித்த போது அவர்கள் அழிக்கப்பட்டார்கள். அல்லது அவர்களிடத்தில் எந்த அளவு சீர்குலைவு ஏற்பட்டது என்றால் அசலான போதனைகளின் இடத்தில் மார்க்கத்திற்குப் புறம்பான விஷயங்களும் வீணான விஷயங்களும் வந்து விட்டன. அது ஆன்மீகம் மற்றும் நல்லொழுக்கத்தின் அழிவாகும். தீமைகள் அவர்களது பார்வையில் நன்மைகளாக ஆகி விட்டது. தூய்மையும் வெட்கமும் அவர்களது பார்வையில் அற்பமான போதனைகளாக ஆகி விட்டது. மதங்களின் பெயரில் சுய விளக்கங்கள் கொடுக்கப்பட்டது. இவ்வாறு அவர்கள் தங்களது நபிமார்களின் போதனைகளையே மாற்றிவிட்டார்கள். நபிமார்களின் போதனைகள் என்ற பெயரில் தவறான தங்களது விருப்பத்திற்கேற்ப போதனைகள் அவர்களது பங்கில் வந்து விட்டது. அதனை அவர்கள் நபிமார்களுடன் தொடர்புபடுத்தி கூறினர். இதன் விளைவாக அல்லாஹ்வின் புனிதத்தன்மையே அவர்களின் உள்ளங்களில் இல்லாமல் ஆகிவிட்டது. மேலும் நபிமார்களின் புனிதத்தன்மையும் அவர்களின் உள்ளங்களில் இல்லாமல் ஆகி விட்டது. ஆன்மீக ரீதியாக அந்த சமுதாயங்கள் மரணித்து விட்டன.

இன்று மேற்கத்திய நாடுகளில் வாழும் சமுதாயங்களின் நிலைமையும் இவ்வாறே ஆகி விட்டது. இஸ்லாத்திற்கு முன் தோன்றிய மதங்களுடன் தங்களுக்கு தொடர்பு இருப்பதாக கூறுபவர்களின் நிலைமையும் இவ்வாறுதான் உள்ளது. தனது வாக்குறுதிக்கேற்ப இந்த இறுதி ஷரீஅத் தான் தனது வேதத்தைப் பாதுகாத்து இருப்பது முஸ்லிம்கள் மீது அல்லாஹ் செய்துள்ள பேரருளாகும். இவ்வாறிருந்த போதிலும்,ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகைக்கு முன்னதாக மார்க்கமும் எஞ்சியிருக்கவில்லை. இஸ்லாமும் எஞ்சியிருக்கவில்லை என்ற சொற்கள் மூலமாக இஸ்லாத்தின் சீர்குலைந்த நிலையை ஒருவர் விளக்கிக் கூறியிருந்தார். ஆனால், திருக்குர்ஆனின் போதனைகளுக்கேற்ப செயல்பட முயற்சி செய்கின்ற ஒரு பிரிவினர் எப்போதும் இருந்து வந்தனர். அவர்கள் அந்த போதனைகளை பாதுகாத்து வந்தார்கள். பிறகு இறுதிக் காலத்தில் அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பினான். வாக்களிக்கப்பட்ட மஹ்தியை அனுப்பி வைத்தான்.

இன்று அஹ்மதிகளாகிய நாம் அனைவரும் இந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்டவர்கள் என்று வாதம் செய்பவர்களாக இருக்கின்றோம். ஈமானை கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து பூமிக்கு கொண்டு வந்த அந்த இமாமுக்கு உதவி செய்பவர்கள் என்று வாதம் செய்பவர்களாக இருக்கின்றோம். ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் மார்க்கத்தை அதன் உண்மையான நிலையில் உலகின் எல்லைகளிளெல்லாம் நிலைநாட்டுவதாக உறுதி எடுத்த அந்த இமாமை ஏற்றுக் கொண்டவர்களாக நாம் இருக்கின்றோம். அந்த இமாமின் ஜமாஅத் இந்த உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும். இன்ஷா அல்லாஹ். நாம் எத்தகைய நற்பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றோம்? அல்லாஹ் உலகின் எல்லா எல்லைகளிலும் முஹம்மதிய மஸீஹின் மூலமாக இஸ்லாமிய மார்க்கத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்கின்ற பொறுப்பை தானே ஏற்றுள்ளான். நீங்களும் அல்லாஹ்வின் இந்த விதியில் பங்கு கொள்பவர்களாக ஆகி விடுங்கள் என்று அவன் நம்மிடம் கூறியுள்ளான். நான் உனது தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன் என்று

அல்லாஹ் கூறினான். நீங்கள் இதன் பங்குதாரர்களாக ஆகி நற்கூலியை சம்பாதியுங்கள் என்று அல்லாஹ் கூறினான். இந்த இறைவனின் விதியில் பங்கு கொள்பவர்களாக நாம் எப்படி ஆக முடியும்? அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவர்களாக நாம் ஆவதற்கான அந்த புரட்சியை நாம் உருவாக்க வேண்டும். நம்மை நாமே களங்கமற்ற முறையில் அல்லாஹ்வுக்காக ஆக்கிக் கொண்டு நம்மிடமுள்ள தீமைகளை விலக்கியவாறு நமது சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கின்ற நிலையை உருவாக்க வேண்டும்.

இந்த வசனத்தில் கவனமூட்டப்பட்டுள்ள விஷயங்கள் நம்மிடம் இருந்தால் மேலும் நாம் அவற்றை பிறருக்கு எட்ட வைப்பவர்களாக இருந்தால் பிறகு ஒவ்வொரு தூய இயல்பு கொண்டவர்களையும் ஈர்க்கக் கூடியதாக அவை இருக்கும். மார்க்கத்தோடு தொடர்புள்ள விஷயங்களை மட்டும் தான் தப்லீக் செய்ய வேண்டும் என்பது கட்டாயமல்ல. அல்லாஹ் கூறியுள்ள இந்த விஷயங்கள் எப்படிப்பட்டதென்றால் ஒரு உலகவாதியைக் கூட அது தன் பக்கம் ஈர்த்து விடும். நல்லொழுக்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற ஆசை அவருக்கு இருந்தால் அவர் எந்த மதத்தை ஏற்றுக் கொண்டவராக இருந்தாலும் அவருக்குள் இருக்கும் அந்த தூய இயல்பானது நல்லொழுக்கத்தை விரும்புகிறது. நல்ல விஷயங்களை அது விரும்புகிறது. இன்னும் சொல்வதென்றால், மார்க்கமில்லாதவர்கள், நாத்திகர்கள் கூட நல்லொழுக்கத்தை நல்லது என்றே கூறுவார்கள். நல்ல விஷயங்களை நன்மை என்றும் தீய விஷயங்களை தீமை என்றும் கூறக்கூடியவர்களாகவே அவர்கள் இருப்பார்கள்.

ஆக, அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் உங்களது இந்த பொறுப்பை புரிந்து கொள்ளுங்கள். உலகின் பயனுக்காகவும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவும் நல்லவற்றை போதனை செய்யுங்கள். தீயவற்றைத் தடுத்து நிறுத்துங்கள். அல்லாஹ்வின் அடியார்களின் உரிமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனமூட்டுங்கள். அல்லாஹ்வின் அடியார்களின் உரிமைகளை பறிக்கின்றவர்களிடமிருந்து விலகி நின்றவாறு அப்படிப்பட்ட செயலை செய்பவர்களை அதிலிருந்து தடுத்து நிறுத்துங்கள். அவர்களுக்கு அதன் தீமைகளைப் பற்றி கவனமூட்டுங்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று இவற்றையெல்லாம் செய்வதற்கு முன்னதாக நாம் நம்மை ஆய்வு செய்வதற்கான தேவை இருக்கின்றது. நமது உள்ளத்தின் நிலையை நாம் சீர்படுத்தினால்தான் நமது சொற்களுக்கும் தாக்கம் ஏற்படும். நமது உள்ளத்திலுள்ள நிலையை சீர்திருத்துவதற்கு எனது ஒவ்வொரு சொல்லின் மீதும் செயலின் மீதும் அல்லாஹ்வின் பார்வை இருக்கின்றது என்ற விஷயத்தை எல்லா சமயத்திலும் நாம் நமது கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். எனது ஒவ்வொரு செயலையும் அவன் பார்க்கின்றான். உலகிற்கு முதலில் உலகியல் ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்து நன்மை, தீமை ஆகியவற்றின் வழிமுறைகளை எடுத்துக்கூற வேண்டும். நல்லவற்றைப் போதிக்க வேண்டும். தீமையை அடையாளம் காட்டி, அதிலிருந்து (அவர்களை) தடுக்க வேண்டும். ஆனால் என்னை நானே இறைவனின் இந்த கூற்றின் கீழ் கொண்டு வர வேண்டும். அதாவது 'போதனை செய்யக் கூடிய இவர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்பவர்கள் ஆவர்'. அல்லாஹ்வின் திருப்தியும் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பும், எல்லா விதமான திருப்தி, நேசம் ஆகியவற்றை விட மிகுதியாக இருந்தால் மட்டுமே அல்லாஹ்வின் மீதுள்ள ஈமான் உண்மையானதாக இருக்க முடியும்.

இதைப் பற்றி அல்லாஹ், 'எவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனரோ அவர்கள் எல்லாவற்றையும் விட அல்லாஹ்வை மிகுதியாக நேசிக்கின்றனர்' என்று கூறுகின்றான்.

மனிதனுக்கு எந்த பொருளின் மீது அன்பு இருக்குமோ அதை அவன் எல்லாவற்றையும் விட அதிகமாக கருத்தில் கொள்வான். எனவே, நம்பிக்கை கொண்டிருப்பதாக வாதம் செய்தால் அல்லாஹ்வின் மீதுள்ள நேசம் எல்லாவற்றையும் விட முதன்மையானதாக இருக்க வேண்டும். இறைவன் மீது அன்பு இருந்தால் அவனது கட்டளைகளுக்கு ஏற்ப செயல்படுவது எல்லாவற்றையும் விட முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆகி விடும். ஆக, நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்கும் போது சிறந்த உம்மத்தாக ஆவதற்கு நாம் ஈமான் கொண்டுள்ளோம் என்ற வாதம் மட்டும் போதுமானதல்ல. இதனால் நமது நோக்கம் முழுமை அடைந்து விடாது என்பது தெரிய வரும். மாறாக, அல்லாஹ்வின் மீதுள்ள அன்பில் நமது பாதங்கள் முன்னேறிச் செல்லும்

போதுதான் நாம் சிறந்த உம்மத்தாக கருதப்படுபவர்களாக ஆவோம். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக நல்லவற்றைப் போதிக்க வேண்டும். தீமைகளிலிருந்து மற்றவர்களை தடுத்து நிறுத்த வேண்டும். பிறகு தான் நாம் நம்மை சிறந்த உம்மத் எனறு கூற முடியும். இந்நிலையில் ஒரு நம்பிக்கையாளர் முன்னேறிச் செல்கின்ற போது ஒரு உண்மையான நம்பிக்கையாளர் எந்த விஷயத்தை நான் போதிக்க இருக்கின்றேனோ அந்த நன்மை என்னிடம் இருக்கின்றதா? எந்த தீமையிலிருந்து நான் மற்றவர்களை தடுக்கின்றேனோ அந்த தீமை என்னிடம் இல்லாமல் இருக்கின்றதா? என்பதைத்தான் முதலில் பார்ப்பார். அவர் இவ்வாறு சிந்திப்பார். அதாவது, எனது நம்பிக்கையின் காரணமாக ஒருபுறம் எனக்கு அல்லாஹ்வின் மீது அன்பு இருக்கின்றது என்று நான் வாதம் செய்கின்றேன். எவர் மீது அன்பு இருக்கின்றதோ அவரிடம் மனிதன் தனது எல்லா நிலைமைகளையும் வெளிப்படையாக தெரிவித்து விடுவான். ஒருவரது எல்லா இரகசியங்களும் மற்றவருக்கு தெரிந்து விடும். அல்லாஹ் எந்த அளவு நேசத்திற்குரியவன் என்றால் அவன் மறைவானவற்றையும் வெளிப்படையானவற்றையும் அறிந்தவனாக இருக்கின்றான். நாம் அவற்றைக் கூற வேண்டும் என்ற தேவை அவனுக்கு இல்லை. மறைவாகவும் வெளிப்படையாகவும் இருப்பவை பற்றிய அறிவு அவனுக்கு இருக்கின்றது.

அல்லாஹ் கூறுவான். ஒருபுறம் நீங்கள் ஈமான் கொண்டுள்ளதாக வாதம் செய்கின்றீர்கள். மறுபுறம் உங்கள் உள்ளங்களை அறிந்த நான் அதில் கறைகள் படிந்திருப்பதை பார்க்கின்றேன். நீங்கள் எதைச் சொல்கின்றீர்களோ அதை செய்வதில்லை. எனவே ஒரு உண்மையான நம்பிக்கையாளரின் அகத்தைப் பார்க்கின்ற அவரது உள்ளத்தின் அமைப்பானது அவரை நேர்வழியில் கொண்டு வந்து விடும். அல்லாஹ் பார்க்கின்றவன்; அறிகின்றவனாக இருக்கின்றான் என்ற விஷயத்தில் மட்டும் அவருக்கு ஈமான் இருக்க வேண்டும் என்பதுதான் நிபந்தனையாகும். நம்மில் எவருக்காவது நமது அகத்தைப் பாதுகாக்கின்ற நமது உள்ளத்திலுள்ள இந்த அமைப்பு சிறந்த தாக்கத்துடன் செயல்படவில்லையென்றால் நமது ஈமானுக்கு இருக்க வேண்டிய அந்த தரம் இல்லை என்று நாம் கவலைப்பட வேண்டும். ஒவ்வொரு தீமையும் சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு தீய செயலும் நமக்கு கண்ணாடியாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அல்லாஹ்வின் மீதுள்ள அன்பினால் உள்ளத்தில் ஒரு துடிப்பு ஏற்படும் போதுதான் இந்த கண்ணாடியையும் நாம் பார்க்க முடியும். இந்த உணர்வு இல்லாமலும் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பு மிகைத்து நிற்காமலும் இருந்தால், மேலும் சமுதாயம் மற்றும் உலகப்பற்று நம்மிடம் மிகைத்து விட்டால் பிறகு தீமைகள், நன்மைகள் ஆகியவற்றின் அளவுகோல் மாறி விடும்.

ஜமாஅத்திற்கென்று சில மரபுகள் உள்ளன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் கலீஃபாக்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் அவற்றை நிலைநாட்டி வந்துள்ளனர். சில விஷயங்கள் ஜமாஅத்தில் நுழைவதை தடுப்பதற்காக இது தொடர்பாக கடுமையுடன் நடந்து கொள்ள வேண்டியது வந்தது. அவ்வாறே நடந்தும் வருகின்றது. ஏனென்றால் ஒரு உண்மையான நம்பிக்கையாளரின் வாழ்வின் நோக்கம் நல்லவற்றை செயல்படுத்துவதாகும். அது அவசியமானதாகும். அது இல்லாமல் அவர் நல்லவற்றைப் போதிக்கவும் முடியாது. தீமைகளை தடுக்கவும் முடியாது. நாங்கள் எங்களிடம் தூய்மையான மாற்றங்களை உருவாக்குவோம். சிறந்த உம்மத்தாக உருவாவதற்கு முயற்சி செய்வோம் என்பதற்காகவே காலத்தின் இமாமுடன் நாம் தொடர்பு வைத்திருந்தால் பிறகு உலகப்பற்றை நாம் கைவிட வேண்டியது வரும். நன்மைகளுக்கான அளவுகோல் நாம் சுயமாக உருவாக்குபவையாக இருக்கக் கூடாது. மாறாக, இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு கற்றுத்தந்த விஷயங்கள்தான் நன்மைகளுக்கான அளவுகோலாக இருக்கும். அல்லாஹ்விடமிருந்து நேர்வழிகாட்டலைப் பெற்று அவற்றை அவர்கள் நமக்குக் கற்றுத் தந்தார்கள். ஜமாஅத்திலும் அவற்றை நடைமுறைப்படுத்த முயற்சி செய்தார்கள். அதற்கான போதனைகளை செய்தார்கள். இந்த முக்கியமான விஷயத்தை ஒவ்வொரு அஹ்மதியும் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒரு ஜமாஅத்தில், ஜமாஅத்தின் போதனைகளுக்கு எதிராக ஒரு திருமணத்தில் சில செயல்கள் நடந்தன. அதன் காரணமாக அங்குள்ளவர்களுக்கு எதிராக நான் நடவடிக்கை

எடுத்தேன். அவர்களில் சிலருக்கு மார்க்கத்தைப் பற்றி அந்த அளவுக்கு அறிவு இல்லை. ஜமாஅத்தின் மரபுகள் தொடர்பாகவும் அவர்களுக்கு தெரியாது. ஆனால், இது ஒரு காரணமல்ல. ஒவ்வொரு அஹ்மதியும் தனது உண்மையான ஈமானை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். அதற்காக முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். ஆனால், அவர்களில் மார்க்கத்தைப் பற்றிய அறிவுள்ள சிலரும் இருந்தார்கள். ஜமாஅத்திற்கு தொண்டு செய்பவர்களும் இருந்தார்கள். ஜமாஅத்தின் மரபுகளையும் போதனைகளையும் நன்கு அறிந்தவர்களும் இருந்தார்கள். அவர்களும் அந்த திருமணத்தில் கலந்துகொண்டு மற்றவர்களோடு ஒத்துப்போயிருக்கின்றார்கள். பலவீனமாக நடந்து கொண்டார்கள். தீமையிலிருந்து தடுப்பது ஒருபுறமிருக்கட்டும். அங்கு அமர்ந்தவாறு அங்கு நடைபெற்ற வீணான நடவடிக்கைகள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ‘தீமையிலிருந்து தடுக்கின்றீர்கள்’ என்பதற்கு ஏற்ப செயல்படுவதற்குப் பகரமாக அந்த தீமையில் பங்கு கொள்பவர்களாக அவர்கள் ஆகி விட்டார்கள். பிறகு நாங்கள் அவர்களை சீர்திருத்துவதற்காகத்தான் அத்திருமணத்தில் கலந்து கொண்டோம் என்று எனக்கும் எழுதியிருந்தார்கள். இது வியக்கத்தக்க சீர்திருத்தமாகும். தீமைகளைத் தடுத்து நிறுத்துவதன் பக்கம் அவர்களுக்கு கவனமூட்டவுமில்லை; நன்மைகளைப் போதிக்கவுமில்லை. எவராவது நன்மைகளைப் போதித்திருந்தாலும் கூட அதுவும் வேறு பல விஷயங்களைப் பற்றியே இருந்தது. இது வியக்கத்தக்க சீர்திருத்தமாகும். வேறு விதமான தீமைகள் நடைபெற்றன. அதைப் பார்த்துக் கொண்டு அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு நன்மைகளைப் போதித்ததாக இவர்கள் கூறுகின்றார்கள். உண்மையில் அவ்வாறு போதனைகள் செய்யப்பட்டதா? இல்லையா? என்பதும் தெரியவில்லை. அவ்வாறு போதனை செய்யப்பட்டிருந்தாலும், நடந்த அந்த தீமையைத் தடுப்பதற்காக அது செய்யப்படவில்லை. மாறாக, வேறு விதமான நன்மைகள் பற்றிய போதனை செய்யப்பட்டிருக்கின்றது. இது எப்படி இருக்கின்றதென்றால், ஒரு திருடன் திருடுவதைப் பார்த்த பிறகு, அவனை அதிலிருந்து தடுப்பதற்குப் பதிலாக, அவனைப் பிடிப்பதற்குப் பதிலாக, எவருக்கும் இழப்பு ஏற்படாமல் காப்பாற்றுவதற்குப் பதிலாக அந்த திருட்டில் அவனுக்கு உதவி செய்து விட்டு, பிறகு அவனிடம் உண்மை பேசுவது மிக நல்ல விஷயம் என்று கூறுவது போன்று இது இருக்கிறது. நிச்சயமாக உண்மை பேசுவது நல்ல விஷயம் தான். ஆனால், அந்த சமயத்தில் நல்லதைப் போதிப்பது அல்லது தீமையிலிருந்து தடுப்பது என்பது திருடனை திருடுவதிலிருந்து தடுப்பதே ஆகும்.

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது ஈமான் இருக்கின்றதென்றால் ஓர் அஹ்மதி, சமுதாயத்திற்கு அஞ்சக் கூடாது. மாறாக, அவர் மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமானதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது சந்ததிகள் மீதும் தன்னை ஏற்றுக் கொண்டவர்கள் மீதும் தஜ்ஜாலின் திகில் ஏற்படாமலிருக்கட்டும் என்றே துஆ செய்துள்ளார்கள். மேற்கத்திய நாடுகளில் வாழ்பவர்கள் தஜ்ஜாலின் இந்த திகிலுக்கு பணிந்து அதன்கீழ் வந்து விட்டால் பிறகு என்ன எஞ்சியிருக்கும்? நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த சம்பவத்தில் பலரும் ஈடுபட்டிருக்கின்றார்கள். நிறைய பேர் கலந்து கொண்டதன் காரணமாக நடவடிக்கை எடுக்கப்படும் போது அதனால் ஜமாஅத்தில் அமைதியின்மை ஏற்பட்டு விடும் என்று எனக்கு கூறப்பட்டது. எவ்வாறிருப்பினும், இதற்கு தண்டனை வழங்கப்படும் என்ற பதிலையே நான் அவர்களுக்கு கூறினேன். இதனால் ஜமாஅத்தில் அமைதியின்மை ஏற்பட்டு சில மக்கள் பிரிந்து சென்றால் அவர்கள் செல்லட்டும். அதைப் பற்றி நமக்கு கவலையில்லை. ஆனால், இஸ்லாம் நமக்கு எதனை கற்றுத் தந்ததோ அதுதான் நடக்கும். தீமைகளிலிருந்தும் வீணான விஷயங்களிலிருந்தும் நாம் நம்மை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனைதான் செயல்படுத்தப்படும். சொல்லிலும் செயலிலும் உள்ள முரண்பாட்டை அல்லாஹ்வும் வெறுக்கின்றான். அல்லாஹ்வின் தூதரும் வெறுக்கின்றார்கள். இதற்கு முன்னரும் இது பற்றி நான் பலமுறை கூறியுள்ளேன். எனக்கு முன்னர் இருந்த கலீஃபாக்களும் இதைப் பற்றி கூறியிருக்கின்றார்கள்.

அதாவது இப்படிப்பட்ட திருமண நிகழ்ச்சிகள் ஓர் அஹ்மதியின் வீட்டில் வைத்து நடந்தால் அங்கிருந்து எழுந்து வந்துவிட வேண்டும். அவ்வாறில்லை என்றால் இது கோழைத்தனமாகும். மேலும் அந்த தீய செயலுக்கு உதவி செய்ததாகவே அது கருதப்படும். சமுதாயத்தின் மீதுள்ள அன்பை விட அல்லாஹ்வின்

மீதுள்ள அன்பு மிகைத்து நிற்க வேண்டும். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதிக்கும் இந்த விஷயங்களைப் புரிந்து கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக! இப்போது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு ஹதீஸை உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன். அதிலிருந்தும் ஒரு நம்பிக்கையாளரின் தரம் எப்படி இருக்க வேண்டும்? என்பது தெரிய வரும். இந்த ஹதீஸை படித்து விட்டு அச்சத்தால் மெய்சிலிர்த்து விடுகின்றது.

**ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

"எவரிடம் இந்த நான்கு பண்புகள் காணப்படுமோ அவர் முழுமையான நயவஞ்சகராவார். எவரிடம் இந்த நான்கு பண்புகளில் ஒரு பண்பு இருக்குமோ அவர் அதனை கைவிடாத வரை அவரிடத்தில் நயவஞ்சகத்தின் ஒரு பண்பு மட்டும் இருக்கும். அந்த பண்புகளில் ஒன்று, **அவரிடம் ஏதாவது நம்பி ஒப்படைக்கப்பட்டால் அவர் அதில் நம்பிக்கை துரோகம் செய்வார்**. இரண்டாவது, **அவர் பேசும் போது பொய் பேசுவார்.** மூன்றாவது, **அவர் வாக்குறுதி கொடுத்து விட்டு, அந்த வாக்குறுதியை முறித்து விடுவார்.** நான்காவது, **அவர் சண்டையிடும் போது ஏசிப் பேசுவார்.**"

புகாரியில் உள்ள நபிமொழிகளை ஒழுங்குமுறைக்கு ஏற்ப வரிசைப்படுத்திய ஜமாஅத் சகோதரர் செய்யது வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் அவர்கள் அந்த நபிமொழிகளுக்கு விளக்கமும் எழுதியுள்ளார்கள். அவர்கள் இந்த நபிமொழிக்கு இவ்வாறு விளக்கம் எழுதியுள்ளார்கள்.

ஈமான் பற்றிய விஷயங்களைக் கூறிக் கொண்டிருக்கும் போது அதில் நயவஞ்சகத்தைப் பற்றி குறிப்பிடும் நோக்கம் என்னவென்றால் இறை மறுப்பு, ஷிர்க், எல்லா வகையான வரம்பு மீறுதல் ஆகியவற்றைப் போன்றே நயவஞ்சகமும் ஈமானை குறைபாடுள்ளதாக ஆக்கி விடுகின்றது.

பிறகு எழுதுகின்றார்கள்: எந்த அளவு ஒரு நபரிடத்தில் இந்த அடையாளங்களில் ஏதாவது ஓர் அடையாளம் இருக்குமோ அந்த அளவு அவரிடம் நயவஞ்சகம் அதிகமாக இருப்பதுடன் ஈமானும் குறைந்து கொண்டே செல்லும். நயவஞ்சகம் என்பதன் பொருளே அகமும், புறமும் ஒன்றுபோல் இருக்காது என்பதாகும். அதாவது உள்ளத்தில் ஒன்றும் வெளிப்படையாக வேறொன்றும் இருக்கும். ஒரு சம்பவத்திற்கு மாற்றமாக ஒன்றைக் கூறுவது; அதாவது உண்மையில் நடந்தது ஒன்றாக இருக்கும். ஆனால் அதற்கு மாற்றமான வேறொன்றை அவர் கூறுவார்.

மேலும் நயவஞ்சகத்தின் அடையாளங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அவை அதன் சரியான விளக்கமாக இருக்கின்றது. பொய்யில் மனிதனுடைய சொல்லும், வாக்குறுதிக்கு மாற்றமாக செயல்படுவதில் மனிதனுடைய செயலும், நம்பிக்கை துரோகம் செய்வதிலும், ஏமாற்றுவதிலும் அவனுடைய எண்ணமும் ஆகிய இவை எல்லாமே உண்மைக்கு மாற்றமானதாகும். உடன்படிக்கையை முறிப்பதும் ஏசிப்பேசுவதும் ஆகிய இந்த செயல்கள் கூட உண்மைக்கு எதிரானதாகும். நயவஞ்சகத்தின் இந்த பெரும் பெரும் அடையாளங்கள் உண்மையை விளக்குவதற்காக கூறப்பட்டிருக்கின்றது. உள்ளத்தில் ஈமான் இல்லாமல் நாவில் மட்டும் அது இருந்தால் அதுவும் உண்மையான நிலைமைக்கு புறம்பான செயலாகும். அவ்வாறே உள்ளத்தில் ஈமான் இருந்து அதனை நாவால் ஏற்றுக் கூறவில்லை என்றாலும் அதுவும் உண்மையான நிலைக்கு மாற்றமான செயலாகும். சிலர் நாங்கள் ஈமான் கொண்டுள்ளோம். நாங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நல்லவர் என்று கருதுகின்றோம் என்றெல்லாம் நம்மிடம் கூறினாலும் உலகத்திற்கு முன்னால் அதனை நாவால் வெளிப்படுத்திக் கூறமாட்டார்கள். இதுவும் நயவஞ்சகமாகும். அல்லது நம்பிக்கை கொண்ட பிறகு அவர்களது செயல் அந்த நம்பிக்கைக்கு சாட்சியாக இல்லையென்றால் அதாவது நம்பிக்கை கொண்ட பிறகு அவர்களது செயல் அந்த நம்பிக்கைக்கு மாற்றமாக இருந்தால், இறைவனின் போதனைகளுக்கு மாற்றமாக இருந்தால் அதுவும் நயவஞ்சகமாகும். சுருக்கமாக, எந்த விஷயங்களில் இந்த நிறங்கள் இருக்குமோ அது நயவஞ்சகமாகி விடும். இதுவே நயவஞ்சகம் என்பதன் பொருளாகும்.

இந்த நபிமொழியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விவரித்துக் கூறியுள்ள தீமைகள் இக்காலத்தில் மிக அதிகமாக நமக்கு தெரிகின்றது. சமுதாயத்தின் தாக்கத்தால் நிச்சயமாக நம்மில் பலரும் இந்த தீமைகளில் ஏதாவது ஒன்றிற்கு இரையாகி உள்ளோம். அல்லது இரையாகிக் கொண்டிருக்கின்றோம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருத்தின்படி இந்த தீமைகளில் ஏதாவது ஒரு தீமை நம்மிடம் இருந்தாலும் அது உள்ளத்தின் ஒரு பகுதியை நயவஞ்சகத்தில் ஆழ்த்தி விடும்.

இந்த தீமைகளைச் சுட்டிக் காட்டியவாறே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்த நயவஞ்சகர்கள் இந்த காலத்தில் இருந்திருந்தால் அவர்கள் மிக கண்ணியமிக்க பெரியவர்களாகவும், நம்பிக்கையாளர்களாகவும் கருதப்பட்டிருப்பார்கள். ஏனென்றால், தீமை மிக அதிகமாக வளர்ந்து விடும் சமயத்தில் குறைவான நன்மைகளுக்கு கூட மிக அதிகமாக மதிப்பு இருக்கும். எவர்கள் நயவஞ்சகர்கள் என்று அழைக்கப்பட்டார்களே உண்மையில் அவர்கள் பெரும் பெரும் சஹாபாக்களுக்கு எதிரில் நயவஞ்சகர்களாக இருந்தார்கள்.

நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதன் காரணமாக நமது தரம் ஏனைய முஸ்லிம்களை விட மிகவும் உயர்வானதாக இருக்க வேண்டும். அந்தக் காலத்தில் இருந்த பலவீனமான ஈமான் கொண்டிருந்தவர்கள் அல்லது சில விஷயங்களில் பலவீனத்தைக் காட்டியவர்கள் நமக்கு முன்மாதிரிகள் அல்ல. மிகவும் உயர்வான தரத்தை அடைந்து விட்ட அந்த சஹாபாக்கள்தான் நமக்கு முன்மாதிரிகளாகத் திகழ்கின்றார்கள். அவர்களுக்கு அல்லாஹ் சொர்க்கம், தனது திருப்தி ஆகியவற்றின் நற்செய்திகளை வழங்கினான்.

அல்லாஹ்வுக்கும் அவனது தூதர் (ஸல்) அவர்களுக்கும் விருப்பமான அந்த தரத்தை நாம் பெற முயற்சி செய்ய வேண்டும். நம்மிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றை பாதுகாப்பதில் நமது தரம் மிகவும் உயர்வானதாக இருக்க வேண்டும். சமுதாயம் அல்லது ஜமாஅத் நம்மிடம் எதை நம்பி ஒப்படைத்திருந்தாலும் அல்லது தனிப்பட்ட நபர் நம்மிடம் எதை நம்பி ஒப்படைத்திருந்தாலும் நாம் ஒவ்வொருவருக்கும் உரிய உரிமையை நிறைவேற்ற வேண்டும். நாம் ஒரு அரசாங்க அலுவலகத்தில் பணிபுரிகின்ற போது நம்முடன் பணியில் இருப்பவர்களின் செயல் எவ்வாறு இருக்கின்றது என்பதைப் பார்க்காமல், நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றை பாதுகாப்பதில் நமது தரம் எந்த அளவு உயர்வானதாக இருக்க வேண்டுமென்றால் அது மற்றவர்களிலிருந்து நம்மை வேறுபடுத்திக் காட்டக் கூடிய ஒன்றாக இருக்க வேண்டும். தனியார் அலுவலகத்தில் பணிபுரிகின்ற அஹ்மதிகளின் முன்மாதிரியானது மற்றவர்களிடமிருந்து அவரை வேறுபடுத்திக் காட்டக் கூடியதாக இருக்க வேண்டும்.

நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றை பேணிப் பாதுகாப்பதில் அஹ்மதிகளின் தரம் மற்றவர்களை விட சிறந்ததாகும் என்று நாம் பெருமையுடன் இன்று கூறுகின்றோம். ஆனால், இதில் மற்றவர்களை விட நமக்கு சிறப்பு இருப்பது மட்டும் பெருமைக்குரிய விஷயமல்ல. ஆனால், இவ்விஷயத்தில் மிகவும் உயர்வான தரத்தை அடைவதுதான் நமக்கு பெருமைக்குரிய விஷயமாகும்.

மூன்றாம் உலக நாடுகளின் முன்னேற்றத்திலுள்ள வேகத்தைப் பார்க்கும் போது அது ஒன்றுமில்லாததற்கு சமமானதாக இருக்கின்றது. சில இடங்களில் முன்னேற்றமே இல்லாத நிலை இருக்கின்றது. அதற்கு காரணம், ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு துறையிலும் நம்பிக்கை துரோகம் செய்யப்படுகின்றது. உதாரணமாக, பாகிஸ்தானுக்கு 'நாங்கள் முஸ்லிம்களின் நாடு' என்ற பெருமை இருக்கின்றது. ஆனால், இப்போது வந்துள்ள புதிய புள்ளி விபரங்களை பார்க்கும் போது லஞ்சம் வாங்குகின்ற நாடுகளில் முன்பு இருந்த இடத்தை விட இன்னும் முன்னோக்கி அது சென்று விட்டது. இதுபோன்ற இன்னும் பல முஸ்லிம் நாடுகள் உள்ளன. அல்லது சில நாடுகளின் முஸ்லிம்கள் எவ்வாறானவர்கள் என்றால் அவர்களின் கையில் அதிகாரம் இருக்கின்றது. ஆனால் நம்பிக்கை துரோகத்தில் அவர்கள் முன்னேறிச்

சென்று விட்டார்கள். முன்னேறிக் கொண்டே இருக்கின்றார்கள். முஸ்லிம்களாக ஆகிவிட்டதால் அவர்கள் சிறந்த உம்மத்தாக ஆகி விடுவார்களா? இஸ்லாமிய சட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் அவர்கள் சிறந்த உம்மத்தாக ஆகி விடுவார்களா? இந்த மக்களிடம் ஒன்றிரண்டு தீமைகள் அல்ல. மாறாக, எல்லா தீமைகளும் இருக்கின்றது. அவ்வாறிருந்தும் கூட அவர்கள் மூஃமின்களாக இருக்கின்றார்கள். உண்மையான மூஃமின்கள் அவர்களது பார்வையில் காஃபிர்களாக தெரிகின்றார்கள்.

இன்றைய காலத்திலுள்ள இப்படிப்பட்ட பெயர்தாங்கி மூஃமின்களைப் பற்றி **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் வாழ்ந்த நயவஞ்சகர்கள் இக்காலத்திலுள்ள பெயர்தாங்கி ஆலிம்களை விட சிறந்தவர்களாக இருக்கின்றார்கள். நம்பி ஒப்படைத்தவற்றை பேணிப் பாதுகாப்பதில் உயர்வான தரத்தை நிலைநாட்டுவதில் மிகவும் சிறந்த நம்பிக்கைக்குரியவராக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திகழ்ந்தார்கள். ஓர் அஹ்மதியால்தான் இதற்கான சரியான உரிமையை நிறைவேற்ற முடியும்; அவ்வாறு உரிமையை நிறைவேற்றவும் வேண்டும். அதன் மூலம் சிறந்த உம்மத்தைச் சேர்ந்தவராக அவர் இருக்க வேண்டும். இந்த சீர்குலைந்து போன சமுதாயத்தில் தமது முன்மாதிரியை நிலைநாட்டியவாறு இந்த உரிமையை நிறைவேற்ற வேண்டும். தங்களது சுற்றுச்சூழலில் உள்ளவர்களுக்கு போதனைகள் செய்தவாறு இந்த உரிமையை நிறைவேற்ற வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அமானிதத்தைக் கொண்டு வந்தார்களோ அது உலகிற்கு ஏகத்துவத்தின் செய்தியை எட்ட வைப்பதாகும். மேலும் இறைவன் மற்றும் அவனது அடியார்களின் உரிமையை செலுத்துவதாகும். இந்த பொறுப்பு தான் ஓர் அஹ்மதியிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. எனவே இன்று அஹ்மதிகள் இந்த நம்பி ஒப்படைக்கப்பட்ட பொறுப்பிற்கு எல்லாரைக் காட்டிலும் மிகுந்த நம்பிக்கைக்குரியவராக செயல்பட வேண்டும். முதலாவதாக, தன்னை சீர்திருத்துவதன் மூலம் இந்த அமானிதத்திற்குரிய உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வுக்குரிய உரிமைகளையும் அல்லாஹ்வின் அடியார்களுக்குரிய உரிமைகளையும் நிறைவேற்றும்போது தான் இந்த அமானிதத்திற்கான உரிமைகளை நிறைவேற்ற முடியும். நமது குழந்தைகளுக்கு தர்பிய்யத் வழங்குவதன் மூலம் இந்த அமானிதத்திற்கான உரிமையை செலுத்த முடியும். அதன் மூலம் இந்த உரிமைகளை நிறைவேற்றுகின்ற ஆன்மா அடுத்த தலைமுறையிலும் உருவாக வேண்டும்.

பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நயவஞ்சகரின் ஓர் அடையாளமாக அவர் பொய் கூறுவார் என்று கூறியுள்ளார்கள். அவர் எதைப் பேசினாலும் அதில் பொய் கலந்திருக்கும். பொய் கூறுபவர்களுக்கு இது எத்தகைய அபாயகரமான எச்சரிக்கையாக இருக்கின்றது? பொய் பேசுவதிலும் சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடு இருக்கின்றது. இந்த முரண்பாடுதான் நயவஞ்சகமாகும். ஒருபுறம் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை இருப்பதாக வாதம் செய்கின்றனர். மறுபுறம் அவர்களே பொய்யும் கூறுகின்றார்கள். இவ்வாறு பொய்யை அவர்கள் அல்லாஹ்விற்கு எதிரில் கொண்டு வந்து நிறுத்தி விட்டார்கள்.

இதனாலேயே அல்லாஹ், பொய்யையும் சிலை வணக்கத்தையும் இணைத்து ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளான். அதாவது, பொய்யையும், இறைவனுக்கு இணை வைப்பதையும் சேர்த்துக் கூறியுள்ளான். இந்த இரண்டு விஷயங்களும் ஒருவரிடம் இருந்தால் அல்லது பொய் மட்டும் கூறுபவராகஅவர் இருந்தாலும் அவ் முஷ்ரிக் ஆவார். அல்லாஹ்வின் மீது ஈமான் இருக்கின்றது என்ற வாதத்துடன் அவர் பொய் கூறுபவராக இருந்தால் இது அவரது தவறான கூற்றாகும். எனவே அவரது நயவஞ்சகம் தெளிவாகி விட்டது. இவ்வாறு பொய் கூறுவதன் மூலம் மனிதன் அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்வதற்குப் பதிலாக ஷிர்க்கிற்கு மிக அருகில் சென்று விடுகின்றான். நாவால் நான் மூஃமின் என்று அவர் கூறினாலும் அவரது செயல் இதை மறுக்கின்றது. முஸ்லிம்களில் பெரும்பாலார் உண்மைக்கும் பொய்யிற்கும் உள்ள அந்த வித்தியாசத்தை மறந்து விட்டார்கள் என்பது எவ்வளவு வேதனைக்குரிய விஷயமாக இருக்கின்றது.

இன்று அஹ்மதிகள் இதற்கு எதிராக ஜிஹாது செய்யா விட்டால், மேலும் தன்னையும் தனது சுற்றுப்புறத்தில் உள்ளவர்களையும் இதிலிருந்து காப்பாற்றா விட்டால் அதன் மூலமாக இஸ்லாத்திற்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் எந்த தொடர்பும் இல்லாத ஒரு கறையை அவர்கள் தங்கள் உள்ளத்தில் படிய வைத்து விட்டார்கள் என்றே அதற்குப் பொருள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சீர்திருத்தம் செய்யவே வந்தார்கள். ஷரீஅத்தை நிலைநாட்டவே வந்தார்கள். அல்லாஹ்வின் நிறத்தை நமக்கு வழங்கவே வந்தார்கள். தமது எஜமானரான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றியவர்களாக இருந்தார்கள். அவர்களை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்கின்ற நம்மிடமும் பொய் நிலைத்திருக்குமென்றால் பிறகு எவ்வாறு நம்மால் ஷரீஅத்தை நிலைநாட்ட முடியும்? நாம் செய்கின்ற இந்த வாதங்களை எல்லாம் எவ்வாறு நம்மால் நிறைவேற்ற முடியும்? நம்மில் ஒவ்வொருவரும் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். மற்றவர்களைப் பார்ப்பதற்கு பதிலாக ஒவ்வொருவரும் தங்கள் மீது தமது பார்வையை செலுத்த வேண்டும். எந்த அளவு நமது சீர்திருத்தம் ஏற்பட்டுள்ளது என்று பார்க்க வேண்டும்.

நயவஞ்சகரின் மூன்றாவது அடையாளமாக அவர் வாக்குறுதியை மீறி செயல்படுவார். உடன்படிக்கை செய்தால் அதில் ஏமாற்றி விடுவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். உடன்படிக்கையை நிறைவேற்றாமல் அதை முறித்து விடுவார் என்று கூறியுள்ளார்கள்.

இன்று உலகத்தின் நிலைமை இவ்வாறுதான் இருக்கின்றது. வியாபாரத்தில் வாக்குறுதி மீறப்படுகின்றது. அன்றாடம் நடைபெறுகின்ற விஷயங்களில் வாக்குறுதிகள் மீறப்படுகின்றது. சமுதாய அளவில் எந்த அளவு வாக்குறுதிகள் மீறப்படுகின்றதென்றால் அதை நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. ஒரு வியாபரத்திற்கான உடன்படிக்கை செய்து கொண்ட பிறகு அதில் எந்த அளவு நம்பிக்கை துரோகமும் வாக்குறுதிகளை மீறுவதும் இருக்கின்றதென்றால் அதை நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது.

ஒருவர் என்னிடம் கூறினார். பாகிஸ்தானிலுள்ள ஒரு வியாபாரி நாங்கள் பாகிஸ்தானிலிருந்து உலகிற்கு ஏற்றுமதி செய்யும் பாசிமதி அரிசியில் எங்களது வழிமுறைக்கேற்ப வேறு அரிசியை கலந்து விடுவோம், எவருக்கும் தெரியாத அளவு கலந்து விடுவோம் என்று அவர் கூறியுள்ளார். இது தெரிய வந்து விட்டால் இதனால் இவரது வியாபாரத்திலும் தீய தாக்கம் ஏற்படும். அத்துடன் நாட்டிற்கும் அவப்பெயர் ஏற்படும் என்பதைப் பற்றி அவருக்கு சிறிதும் கவலையில்லை. இவ்வாறு இன்னும் பல வேலைகள் செய்யப்படுகின்றது. இது வாக்குறுதியை மீறுவது மட்டுமல்ல. மாறாக, இது நம்பிக்கை துரோகமும் பொய்யும் ஆகும். கொஞ்சம் பணம் சம்பாதிப்பதற்காக இவர்கள் தங்களது வாக்குறுதியை மீறுகின்றார்கள். எந்த ரஸூல் (ஸல்) அவர்களோடு இவர்கள் தங்களை தொடர்புபடுத்திக் கூறுகின்றார்களோ அவர்கள் இவர்களிடம் எத்தகைய எதிர்பார்ப்பை வைத்துள்ளார்கள்? வியாபாரத்தில் இத்தகைய எந்த செயலையும் அவர்களிடம் நம்மால் பார்க்க முடியாது. போர் உடன்படிக்கைகளையும் பொதுவான உடன்படிக்கைகளையும் அவர்கள் எவ்வாறு நிறைவேற்றிக் காட்டினார்கள் என்றால் உலகிலுள்ள எந்த உடன்படிக்கைகளிலும் அதற்கான உதாரணத்தை நம்மால் பார்க்க முடியவில்லை.

உதாரணமாக, ஹுதைபிய்யா உடன்படிக்கை எழுதப்பட்டுக்கொண்டிருந்த சமயத்தில் இரு தரப்பிற்கும் இடையிலுள்ள உடன்படிக்கை நாவால் மட்டும் தீர்மானிக்கப்பட்ட சமயத்தில், அதன் அடிப்படையில் காஃபிர்களின் கோரிக்கைக்கேற்ப மக்காவிலிருந்து தன்னிடம் வந்த ஒரு சஹாபியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்ப மக்காவிற்கே செல்லும்படி கூறி திரும்பி அனுப்பி வைத்தார்கள். இப்போது நிபந்தனைகள் எழுதப்படவில்லையே! அதனால் அவர் திரும்ப செல்ல முடியாது என்று அவர்களிடம் அன்னார் கூறவில்லை. ஏனென்றால், நாவளவில் தான் உடன்படிக்கைக்கான நிபந்தனைகள் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவை எழுதப்பட்டுக் கொண்டிருந்தது. நல்லது; நீங்கள் திரும்பச் சென்று விடுங்கள் என்று அந்த சஹாபியிடம்

அன்னார் கூறினார்கள். அந்த நபித்தோழர் திரும்ப சென்று விடுவதால் அவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். இதுதான் அவர்களின் உயர்வான தரமாகும்.

எனவே, இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடிமையாக இருப்பவரின் அடிமைகளும் கூட இந்த தரத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருமுறை பஜாரில் நடந்து சென்று கொண்டிருந்த போது, ஒரு கோதுமை குவியலில் தனது கையை நுழைத்து அந்த கோதுமை குவியலுக்கு இடையில் ஈரமான கோதுமை இருப்பதைப் பார்த்தார்கள். உடனே அந்த வியாபாரியிடம், 'நீங்கள் ஏமாற்றுகிறீர்கள்' என்று அன்னார் கூறினார்கள். 'ஒரு முஸ்லிமுக்கு இது அழகல்ல' என்றும் கூறினார்கள். எனவே நாம் இதுபோன்ற உயர்வான தரத்தை அடைய முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நமக்கு அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை இருப்பதோடு நாம் உண்மையான நம்பிக்கையாளராக ஆக முடியும்.

பிறகு நயவஞ்சகரின் இன்னொரு அடையாளமாக அவர்கள் வாக்குவாதத்தில் ஈடுபடும் போது தீய வார்த்தைகளைப் பேசுவார்கள். ஏசிப்பேச ஆரம்பித்து விடுவார்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது. இந்த குறிப்பான செயலை நாம் நமது எதிரிகளிடம் பார்க்கின்றோம். அது எவ்வளவு அதிகமாக இருக்கின்றது என்பதை ஜமாஅத்திற்கு எதிராக செயல்படுகின்ற ஒவ்வொரு தொலைக்காட்சி சேனலும், இணையதளமும் தாமாகவே வெளிப்படுத்திக் காட்டுகின்றன. இப்படிப்பட்ட விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வது ஓர் அஹ்மதியின் கடமையாகும். எதிரிகளின் தரப்பிலிருந்தும் வெளிப்படுகின்ற இந்த அடையாளம் அவர்களின் பங்கில் இருக்கும். ஓர் அஹ்மதி இதிலிருந்தும் எப்போதும் தவிர்ந்து கொள்ள வேண்டும். கடுமையான வார்த்தைகளுக்கு பதில் கூறும் போது அதனால் தீய வார்த்தைகளைப் பயன்படுத்துவது, ஏசிப்பேசுவது போன்ற நிலைமை ஒருபோதும் ஏற்பட்டு விடக் கூடாது. நமது எஜமானரும் தலைவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய அந்த முன்மாதிரி நம் கண் முன்னால் இருக்க வேண்டும். பிறகு அவர்களின் உண்மையான அடிமையாக இருந்த காலத்தின் மஸீஹ் நமக்கு காட்டித் தந்துள்ள முன்மாதிரியும் நம் கண் முன்னால் இருக்க வேண்டும். மக்கள் அவர்களது முகத்திற்கு எதிரில் நின்று கொண்டு அவர்களைப் பற்றி தீய சொற்களை கூறினார்கள். ஆனால் அதற்கு ஒருபோதும் அவர்கள் கடுமையாக பதில் கூறவில்லை. மாறாக அவற்றைக் கண்டும் காணாதது போல் நடந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா உலகங்களுக்கும் அருட்கொடையாக திகழ்ந்தார்கள். அவர்களிடமிருந்து மென்மை மட்டும் வெளிப்படவில்லை. அவர்களிடம் கடுமையாக நடந்து கொண்டவர்களிடம் கூட அவர்கள் கருணையுடன் நடந்து கொண்டார்கள். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியின் ஈமானையும் சமுதாயத்தின் அமைதியைச் சீர்குலைக்கின்ற இந்த நோய்களிலிருந்தும் பாதுகாப்பானாக. நாம் எப்போதும் உண்மையான முறையில் 'நீங்கள் நன்மையை ஏவுகின்றீர்கள்; தீமையிலிருந்து தடுக்கின்றீர்கள்' என்ற வசனத்திற்கேற்ப செயல்படுபவர்களாக இருப்போமாக.

இன்று முஸ்லிம்களில் பெரும்பாலாருக்கு இந்த நோய்களின் காரணமாக அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. இந்த பொய், நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றில் நம்பிக்கை துரோகம் செய்வது, உடன்படிக்கைகளை மதிக்காமல் நடந்து கொள்வது ஆகிய இவைதான் நாட்டின் அமைதியை அழித்து விட்டது. பெரும்பாலான முஸ்லிம் நாடுகளில் ஆட்சியில் இருப்பவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நிலவி வரும் போரின் சூழலுக்கான காரணமும் இந்த நயவஞ்சகமேயாகும். இதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். இதன் காரணமாக முஸ்லிம் அல்லாதவர்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்குமான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இஸ்ரேலின் ஒரு பத்திரிகையில் ஒரு யூதர் ஒரு வாக்கியம் எழுதியுள்ளார். அதில் இஸ்லாத்தின் போதனைகள் அமைதியை விரும்பக்கூடியது அல்ல. இந்த முஸ்லிம்களின் செயல்களிலிருந்து இது தெளிவாகி விட்டது. அதாவது இஸ்லாத்தின் போதனைகள் அமைதிக்கு எதிரானதாகும். அமைதியின் போதனைகள் இருக்கின்றதென்றால் ஒன்று, அது யூதர்களிடம் இருக்கின்றது. அல்லது கிறிஸ்தவர்களிடம் இருக்கின்றது. முஸ்லிம்களிடம் அமைதியின் விஷயங்கள் தென்படுகின்றதென்றால் அது மிக சிறுபான்மையினரிடத்தில்தான் தென்படுகிறது என்று அவர் எழுதியுள்ளார். இது எவ்வளவு

வேதனைக்குரிய விஷயமாக இருக்கின்றது. எந்த மதத்தைச் சார்ந்தவர்களின் போதனைகளில் கடினம் காட்டுவது எழுதப்பட்டிருக்கின்றதோ அவர்கள் முஸ்லிம்களின் செயலின் காரணமாக இஸ்லாத்திற்கு எதிராக ஆட்சேபனைகளை செய்கின்றார்கள். ஒரு எல்லைக்குட்பட்ட சிறுபான்மையாக இருக்கும் அஹ்மதிகளைத்தான் இவர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள் என்பதாலோ அல்லது முஸ்லிம்களில் ஒரு பிரிவினரை இவர்கள் சுட்டிக் காட்டிப் பேசுகின்றார்கள் என்பதாலோ நாம் மகிழ்ச்சி அடைந்து விட முடியாது. சிறுபான்மையாக இருப்பவர்களுக்கு எந்த அவப்பெயரும் இல்லை. ஏனென்றால் அவர்களிடம் அமைதி தென்படுகின்றது என்று அவர்கள் கூறுவதைக் கேட்டு நாம் மகிழ்ச்சி அடைந்து விட முடியாது. முஸ்லிம்களில் பெரும்பாலார் இஸ்லாத்தின் போதனைகளுக்கேற்ப அன்பு, நேசம், அமைதி ஆகியவற்றின் போதனைகளை வழங்கக் கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்பதில்தான் நமக்கு மகிழ்ச்சி ஏற்படும். இது இஸ்லாத்தின் போதனை என்ற பெயரில் இவர்கள் கூறுகின்ற கொடூரமான குற்றச்சாட்டாகும். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை இவர்கள் இஸ்லாத்தின் மீது சுமத்திக் கொண்டே செல்கின்றார்கள். முஸ்லிம்களுக்கு இது பற்றிய எந்த கவலையும் இல்லை. நமக்கு இது மிகவும் துன்பம் தரக்கூடிய விஷயமாகும். ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் போதனை அமைதி, அன்பு, நேசம் ஆகியவற்றின் போதனையாகும் என்று உலகம் கூறும்போதுதான் நமக்கு மகிழ்ச்சி ஏற்படும். இந்த போதனைகள் மட்டும் தான் எத்தகைய அழகிய போதனைகளாக இருக்கின்றது என்றால் அது இல்லாமல் உலகில் அமைதியை நாம் ஏற்படுத்த முடியாது. முஸ்லிம் உம்மத்திற்கு அல்லாஹ் அறிவை வழங்குவதற்காக துஆ செய்வதும் நம்மீது கடமையாகும். அவர்கள் உண்மையான முறையில் இந்த அமைதியின் போதனைகளுக்கேற்ப செயல்படுவதற்கு நாம் துஆ செய்ய வேண்டும். அதன் மூலம் நாமும் உண்மையான முறையில் நமது கடமைகளை நிறைவேற்றியவர்களாக ஆகிவிடுவோம்.

கடந்த குத்பாவில் நான் ஒரு மேற்கோளை உங்கள் முன் வைத்தேன். அதுபற்றி நான் விளக்க விரும்புகின்றேன். அபூலஹப் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இழிவான பரிமாற்றத்துடன் நடந்து கொண்டதால் ஓநாய் அவனை கடித்து துண்டு துண்டாக்கி விட்டது என்று நான் கூறியிருந்தேன். அதிலுள்ள தவற்றை இன்று நான் சரி செய்ய விரும்புகிறேன். பொதுவாக திருக்குர்ஆன், நபிமொழி, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்றுகள் ஆகியவை தொடர்பான மேற்கோள்களை நானே சரிபார்த்துக் கொள்வேன். அல்லது எவரிடமாவது சரிபார்ப்பதற்கு கொடுப்பேன். ஆனால் இந்த விஷயத்தை நமது புத்தகங்களில் நமது ஆலிம்களில் ஒருவர் எழுதியுள்ளார். இது தொடர்பாக ஒரு கட்டுரையை அவர்கள் எழுதியிருந்தார்கள். அது சரியான மேற்கோளாக இருக்கும் என்று நான் நினைத்தேன். இந்த தவறும் இன்றும் கூட சிறந்த ஒன்றாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் அபூலஹபுடன் நடந்த ஒன்றல்ல. மாறாக அவனது மகனான உதைபாவுடன் நடந்ததாகும். அதன் விளக்கம் ரூஹுல் மஆனியில் இவ்வாறு அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. பத்ர் போர் நடந்து 7 நாட்கள் கழிந்த பிறகு அபூலஹபின் அழிவு ஏற்பட்டது. அவர் பிளேக் போன்ற ஒரு நோயால் அழிவிற்கு ஆளானான். மூன்று நாட்கள் இவ்வாறான மோசமான நிலைமையில் அவனது உடலிலிருந்து துர்நாற்றம் வர ஆரம்பித்தது. அவனது குடும்பத்தினர் இப்படிப்பட்ட இழிவான நிலைமைக்கு அஞ்சியவர்களாக ஒரு குழியைத் தோண்டி அதில் அவனை ஒரு விறகின் மூலம் தள்ளிவிட்டு அக்குழியில் விழச்செய்து கற்களை அந்தக் குழியில் எறிந்து அதனை நிரப்பி விட்டார்கள். இவ்வாறு அவன் இழிவாக நடந்து கொண்டதற்காக அல்லாஹ் அவனை பழிவாங்கினான்.

**திப்ரியில் இன்னொரு அறிவிப்பு இவ்வாறு வருகின்றது.**

அபூலஹபிற்கு பெரிய கட்டி ஒன்று ஏற்பட்டு அதனால் அவன் இறந்து விட்டான். அவனது இரண்டு அல்லது மூன்று மகன்கள் மூன்று இரவுகள் வரை அவனை அடக்கம் செய்யாமல் இருந்தார்கள். வெப்பத்தால் பிணம் அழுகிப்போய் அதிலிருந்தும் துர்நாற்றம் வீச ஆரம்பித்தது. பிறகு அதே நிலையில் அவன் அடக்கம் செய்யப்பட்டான். எவ்வாறிருப்பினும், அவனது முடிவும் தீயதாகவே இருந்தது. அத்துடன் அவனது மகன் உதைபாவின் முடிவும் தீயதாகவே இருந்தது.

இந்த எனது தவறின் காரணமாக ஒரு அறிவிப்பிற்குப் பதிலாக இது தொடர்பான இரண்டு அறிவிப்புகள் எனக்கு கிடைத்தன.

உதைபாவின் திருமணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகளான உம்மே குல்ஸூமுடன் நடந்தது. ஒரு அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. அவன் ஷாம் நாட்டிற்கு செல்வதற்கு முன்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு துன்பம் தரும் நோக்கத்துடன் அவர்களிடம் சென்றான். நான் நஜம் சூராவை மறுக்கின்றேன் என்று கூறினான். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் துன்பம் தரும் வகையில் அவர்களுக்கு முன்னாலேயே துப்பி விட்டு அவர்களது மகளுக்கு தலாக் கொடுத்தான். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனுக்கு எதிராக துஆ செய்தார்கள். பிறகு இதே பயணத்தில் ஓநாய் அவனை கடித்துக் குதறியதன் காரணமாக அவன் அழிந்து விட்டான். எவ்வாறிருப்பினும், இந்த அறிவிப்பு மற்ற இடங்களிலும் கிடைக்கின்றது.

மூன்றாவது விஷயம் இப்போது தொழுகைக்கு பிறகு நான் ஒரு ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். இது மியான் முஹம்மது சாஹிப் மர்ஹூம் அவர்களின் மகன் ரஸீத் அஹ்மத் சாஹிப் பட் அவர்களது ஜனாஸாவாகும். இவர் லாஹூரைச் சார்ந்தவர். 2010 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18ம் தேதி தமது 71வது வயதில் இதய நோய் காரணமாக இவர் வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அவர் 2010 ஆம் ஆண்டு மே மாதம் 28 ம் தேதி தாருஸ் ஸிக்ரில் இருந்தார்கள். இவரது கால்களில் குண்டு பாய்ந்தது. அதனால் அவர்கள் காயமுற்றார்கள். மாவட்ட மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். அங்கு ஒரு நாள் அவர் இருந்தார். அதிகமாக இரத்தம் வேளியேறியதால் அவர் மிகவும் பலவீனமானவராக ஆகி விட்டார். அதனால் அவரது இதயத்திற்கு பெரும் தாக்கம் ஏற்பட்டது.

திருமண உறவுகளுக்கான செயலராகவும், இஸ்லாஹ்-வ-இர்ஷாத் செயலராகவும், அன்ஸாருல்லாஹ்வின் ஸயீம் ஆகவும் அவர் பணியாற்றி ஜமாஅத்திற்கு அவர் தொண்டாற்றியுள்ளார். தஹஜ்ஜுத் தொழுபவராகவும், கஷ்ஃப் காட்சிகளை காண்பவராகவும், அல்லாஹ்வின் பக்கம் அழைத்தல், பொதுத்தொண்டு ஆகியவற்றில் முழுமையான ஆர்வத்துடன் செயல்படுபவராகவும் அவர் இருந்தார். அர்ப்பணிக்கின்ற மனப்பாங்கு கொண்ட அஹ்மதியாக இருந்தார். ஹோமியோபதியிலும் அவருக்கு ஆர்வம் இருந்தது. தனது வீட்டில் மெடிக்கல் கேம்ப் நடத்தி மக்களுக்கு சேவையாற்றி வந்தார். ஆயிரக்கணக்கான மக்கள் அவரிடமிருந்து பலன் பெற்றார்கள். கிலாஃபத்துடன் அவருக்கு ஆழ்ந்த பற்று இருந்தது. தனக்கு கிடைக்கின்ற ஒவ்வொரு வெற்றியையும் அவர் காலத்தின் கலீஃபாவுடன் தொடர்புபடுத்தி, கலீஃபாவின் துஆவின் மூலமாகவே நடந்தது என்று கூறி வந்தார். மே மாதம் 18ம் தேதிக்குப் பிறகு தான் கண்ட ஒரு கஷ்ஃப் பற்றி அவர் கூறியிருந்தார். அவர் கூறினார்: நான் ஒரு பறக்கும் தட்டை பார்த்தேன். அது வானத்தில் இங்கும் அங்கும் சுற்றிக் கொண்டிருந்தது. அதில் என்ன இருக்கிறது என்பதை நான் பார்க்க விரும்பினேன். அப்போது அந்த பறக்கும் தட்டு எனக்கு முன்னால் கோணலாக ஆகிவிட்டது. அதில் நட்சத்திரங்கள் மின்னுவதை நான் கண்டேன். அது வெகுநேரம் எனக்கு முன்னால் இருந்தது. பிறகு அந்த பறக்கும் தட்டு வானத்தின் பக்கம் சென்று விட்டது. அப்போது எனது உள்ளத்தில் லாஹூரில் மே மாதம் 28ம் தேதி ஷஹீதாகி நிரந்தர வாழ்வு பெற்ற ஷஹீதுகள்தான் இவர்கள் என்ற விஷயம் போடப்பட்டது. பிறகு குத்பாவில் இதுபற்றி நான் கூறிய போது எனக்கு மேலும் ஆறுதலாக அது இருந்தது என்று அவர் கூறுகின்றார். அல்லாஹ் இவருடைய தகுதிகளை உயர்த்துவானாக. இவரை சார்ந்திருப்பவர்களுக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 04.02.2011**

Translated by : **Maulvi M. RAFEEQ AHMAD H.A.**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**